மலர் : 12 **இயேசுகிறிஸ்துவே கர்த்தர்** இதழ் : 1

தனிப்பிரதி ரூ. 3

# HUNDRED VILLAGE MINISTRY

ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

हन्ड्रड विल्लज मिनस्ट्री

ഹണ്ഡ്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി

**நவம்பர் 2011**

ஆண்டுசந்தா இந்தியா ரூ.25 வெளிநாடு ரூ.

# 100- கிராம ஊழியம்

TAMIL VILLAGE GOSPEL MISSION – மாதாந்திர அறிக்கை




**TVGM - 2011 நவம்பர்**
**கர்த்தரின் வாக்குத்தத்தம்**

## பயப்படாதே,
## நீ
## வெட்கப்படுவதில்லை.

ஏசாயா 54 : 4.





04.09.2011 ஞாயிறு மாலை **4.00**மணிக்கு **சகோ.ராபின்சன்** (நாசரேத்) அவர்கள் **சூறாவளிப்பட்டி** கிராமத்தில் ஜெபவீடு கட்ட கோடு போட்ட நிலத்தில் நின்று **முதல்முறையாக** விதவைகளுக்கு நற்செய்தியளித்து தேவனை மகிமைப்படுத்தினார்கள். **இங்குள்ள தடைகள் நீங்கி ஜெபவீடு கட்டப்பட ஜெபியுங்கள்.**

# இயேசுகிறிஸ்துவே கர்த்தர்



**ஸ்டீபன் கிறிஸ்டோபர்**
மேனேஜிங் டிரஸ்டி
**Cell : 94449 80445**



P.T. **கிறிஸ்டோபர்**
TVGM ஸ்தாபகர்
**Cell : 94435 44628**

**கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதரனே, சகோதரியே!**

***"பயப்படாதே , நீ வெட்கப்படுவதில்லை"*** என்ற வாக்குத்தத்தத்தின் மூலம் உங்களை ஆசீர்வதிக்கிறேன்.

கிறிஸ்மஸ் நாட்கள் நெருங்கி வருகிறது. உங்களுக்கு எங்கள் அன்பின் கிறிஸ்மஸ் வாழ்த்துக்களை இப்பொழுதே தெரிவிக்கிறோம். கிறிஸ்மஸ் நாட்கள் உங்களுக்கு மிகுந்த சமாதானத்தைக் கொடுப்பதாக.

கர்த்தருடைய கிருபையினாலும், உங்கள் ஜெபத்தினாலும் தற்சமயம் 7 ஜெபவீடுகள் கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது. நவம்பர் மாதம் 2 , 3 , 28 , 29 , 30 ஆகிய தேதிகளில் 6 ஜெபவீடுகளும் , டிசம்பர் மாதம் 1 ஜெபவீடும் பிரதிஷ்டை செய்ய திட்டமிட்டுள்ளோம். **ஒரிஸாவில்** சீக்கிரத்தில் நிலம் வாங்கி ஜெபவீடு கட்ட வாஞ்சிக்கிறோம்.

இந்தப் பத்திரிகை உங்கள் கையில் கிடைக்கும்பொழுது **ஒரிஸாவில் 1 லட்சம் கைப்பிரதிகள்** கொடுத்து முடிக்கப்பட்டிருக்கும். **ஆனாலும் தொடர்ந்து கைப்பிரதி ஊழியங்கள் நடைபெறும்.**

புதிதாக மத்தியபிரதேசத்தில் **நாக்பூரை** மையமாக வைத்து **ஒரு லட்சம் ஹிந்தி கைப்பிரதிகள்** வழங்க வாஞ்சிக்கிறோம். தேவனுடைய தெளிவான வழிநடத்துதலுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

"**நம்மில் வாழ்ந்த அவர் - இயேசுகிறிஸ்து** " என்ற புத்தகத்தை **ஒரு லட்சம் மாணவ, மாணவிகளுக்கு** பள்ளிக்கூடங்களில் இலவசமாக வழங்க வாஞ்சிக்கிறோம். கர்த்தருடைய சமுகம் முன்செல்ல ஜெபியுங்கள்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

07.10.2011

கிறிஸ்துவின் பணியில் ,
**ஸ்டீபன் கிறிஸ்டோபர்**

# ஏசா.54 : 4 பயப்படாதே, நீ வெட்கப்படுவதில்லை.

வாக்குத்தத்த செய்தி : **சகோதரி பெர்சிஸ் ஸ்டீபன்**

தேவனுடைய வாக்குத்தத்தத்திற்காக ஆவலுடன் காத்திருக்கும் சகோதர, சகோதரிகளே!

இந்த மாதம் தேவன் உங்களுக்கு கொடுக்கும் **வாக்குத்தத்தம் :**

ஏசாயா 54 : 4

**பயப்படாதே,**
**நீ**
**வெட்கப்படுவதில்லை.**

தேவன் இந்த வாக்குத்தத்தத்தை இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஏசாயா தீர்க்கதரிசியின் மூலமாக வெளிப்படுத்துகிறார்.

ஏசாயா 54ம் அதிகாரத்தில் ஏசாயா தீர்க்கதரிசி இஸ்ரவேலை, பிள்ளை பெறாத, வெட்கப்படுத்தப்பட்ட, கைவிடபட்ட ஸ்தீரிக்கு ஒப்பிடுகிறார். ஆனால் **கர்த்தர் அவர்களை மீட்டுக் கொள்வார்** என்று தீர்க்கதரிசனம் உரைக்கிறார்.

தேவனுடைய பிள்ளைகளே ! இன்று நீங்கள் கூட வேலை செய்யும் அலுவலகங்களிலும், உங்கள் வியாபாரத்திலும், குடும்பங்களிலும், ஊழியங்களிலும் வெட்கத்தை சந்தித்திருக்கலாம்.

ஆனால் **இனி நீங்கள் வெட்கப்பட வேண்டியதில்லை.** கர்த்தர் உங்கள் வெட்கத்தையும் இலச்சையையும் மாற்றிப் போடுவார்.

**யோவேல் 2 : 27** "**நானே உங்கள் தேவனாகிய கர்த்தர்**, வேறொருவர் இல்லையென்றும் அறிந்து கொள்வீர்கள்; **என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டு போவதில்லை.**"

கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை தெரிந்து கொண்டதினாலே அவர்கள் வழி விலகி போகும் போதெல்லாம் **நானே கர்த்தர்** என்பதை நினைவுபடுத்துகிறார். இன்று நாமும் கூட தேவனுடைய ஜனங்கள் தான். **பல நேரங்களில் நாம் வழி விலகி செல்லும் போது வெட்கப்பட்டு போகிறோம்.** ஆனால் இரக்கமும் அன்பும் உள்ள தேவன் தம்முடைய வசனங்களினாலே நம்மை உணர்த்தி நம்மை வெட்கப்படாதபடி செய்கிறார். அதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

**நாம் வெட்கப்பட்டு போகாதிருக்க என்ன செய்ய வேண்டும் என்று வேதம் கூறுவதை காணலாம்.**

1. ***கர்த்தருக்கு காத்திருக்க வேண்டும்.***
2. ***கர்த்தரை நோக்கி பார்க்க வேண்டும்.***
3. ***கர்த்தரை விசுவாசிக்க வேண்டும்.***
4. ***கர்த்தருடைய கற்பனைகளை கைக்கொள்ள வேண்டும்.***
5. ***உத்தமர்களாய் இருக்க வேண்டும்.***

I **முதலாவதாக :** நாம் கர்த்தருக்கு காத்திருக்கும்போது வெட்கப்பட்டு போக மாட்டோம்.

ஏசாயா 49:23 ல் "**நான் கர்த்தர் எனக்கு காத்திருக்கிறவர்கள் வெட்கப் பட்டு போவதில்லை** " என்று வாக்களித்து இருக்கிறார்.

ஆகவே நமக்கு பல நெருக்கங்கள் வரும்போதும் நாம் சுயத்தினால் எதையும் செய்யாமல், அவசரப்பட்டு எந்த முடிவும் எடுக்காமல், கர்த்தரின் பாதத்தில் ஜெபித்து காத்திருக்கும் போது, **அவர் நமக்கு தகுந்த நேரத்தில் பதில் தந்து நம்மை வெட்கப்படுத்தாத படிக்கு காத்துக் கொள்வார்.** ஆகவே காத்திருத்தல் அவசியம்.

II **இரண்டாவதாக :** நாம் கர்த்தரை நோக்கி பார்க்கும்போது வெட்கப்பட்டு போவதில்லை என்று வாக்களித்திருக் கிறார்.

சங்கீதம் **34:5** ல் "**அவர்கள் அவரை நோக்கி பார்த்து பிரகாசமடைந் தார்கள்; அவர்கள் முகங்கள் வெட்கப்பட்டு போவதில்லை.**" என்று பார்க்கிறோம்.

வேதத்திலே, அன்னாள் குழந்தை பாக்கியம் இல்லாத காரணத்தினால் சிறுமைப்பட்டு, மனம் நொந்து வேதனையோடு காணப்பட்டாள். அவள் கர்த்தரை நோக்கி பார்த்து விண்ணப்பம் செய்தபோது அப்புறம் அவள் துக்கமுகமாயிருக்கவில்லை என்று ( 1சாமு.1:18 ல் ) வாசிக்கிறோம்.

நாமும் கூட தேவ பிரசன்னத்தை உணர்ந்து அவரை நோக்கிப் பார்த்து நம்முடைய தேவைகளை தெரிவித் தால், தேவன் நம்மை ஒருபோதும் வெட்கப்படுத்த மாட்டார்.

III **மூன்றாவதாக :** நாம் கர்த்தரை விசுவாசித்து, நம்பும் போது வெட்கப் பட்டு போக மாட்டோம்.

ரோமர் **10: 11** ல் "**அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்பட்டுபோவதில்லை"** என்று வேதம் சொல்லுகிறது.

ஆதி . **12:1-7** ஆபிரகாம் தேவ தரிசனமும் தேவசத்தமும் கேட்டு கீழ்படிந்து விசுவாசத்தோடே தேவன் காண்பிக்கும் தேசத்திற்கு புறப்பட்டு போனதினாலே **தேவனுடைய சிநேகிதன்** என்று சாட்சி பெற்று **175 ஆம் வயதில்** மரித்து, பரதீசில் ஜீவித்திருக்கிறார் என காணலாம். தேவனை விசுவாசித்து வாழ்ந்தால் வெட்கப்பட்டு போகமாட்டோம்.

IV **நான்காவதாக :** கர்த்தருடைய கட்டளைகளையும் பிரமாணங் களையும் கைக்கொள்ளும்போது நாம் வெட்கப்பட்டு போக மாட்டோம்.

சங்கீதம் **119:6** ல் "**நான் உம்முடைய கற்பனைகளையெல்லாம் கண்ணோக்கும் போது வெட்கப் பட்டு போவதில்லை**" என்று வாசிக்கிறோம்.

கர்த்தர் நமக்கு கட்டளைகளை தந்து, அந்த கட்டளைகளை கருத்தாய் கைக்கொள்ளும்படி மோசேயின் மூலமாக கற்பித்தார். அந்த கற்பனைகளை இன்று நாமும் கைக்கொள்வோமானால் வெட்கப் பட்டு போக மாட்டோம். தாவீது சில கற்பனைகளை மீறி நடந்தபோதும் அதை உணர்ந்து மனம் திரும்பியதால் அவன் வெட்கப்படாதபடி உயர்த்தப் பட்டான்.

V **ஐந்தாவதாக** : நாம் தேவனுக்கு முன்பாக உத்தமர்களாய் இருக்கும் போது வெட்கப்பட்டு போகமாட்டோம்.

சங்கீதம் 37: 18,19

**"உத்தமர்களின நாட்களை கர்த்தர் அறிந்திருக்கிறார்; அவர்கள் சுதந்திரம் என்றென்றைக்கும் இருக்கும். அவர்கள் ஆபத்து காலத்திலே வெட்கப்பட்டு போகா திருந்து, பஞ்சகாலத்திலே திருப்தி யடைவார்கள்."** என்று வாசிக்கிறோம்.

நாம் எல்லாவற்றிலும் உண்மையுள்ளவர்களாக காணப்பட வேண்டும் . அதையே தேவன் விரும்புகிறார்.

மோசே தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாக இருந்தான் ( எபிரெயர் 3:2 ) . ஆகவே தேவன் மோசேயை கொண்டு இஸ்ரவேல் ஜனங்களை நடத்தினார்.

பரிசுத்த பவுல் **உண்மையுள்ள வனாக இருந்தபடியினால், தேவன் அவனை தன் ஊழியத்திற்கு ஏற்படுத்தினார்** என்று திட்டமாக கூறுகிறார் ( 1தீமோ. 1: 12 ).

ஆதலால் உத்தமர்களை தேவன் ஒருபோதும் வெட்கப்படுத்த மாட்டார்.

ஆகவே கர்த்தருக்கு காத்தி ருக்கும்போதும், அவரை நோக்கி பார்க்கும்போதும், அவரை விசுவா சிக்கும் போதும், அவருடைய கற்பனை களை கைக்கொள்ளும்போதும், உத்தமமாய் நடக்கும்போதும் தேவன் நம்மை ஒருபோதும் வெட்கப்படுத்த மாட்டார்.

**பக்தன் பாடுகிறார் :**

***வெட்கப்பட்டு போவதில்லை***
***என் மனமே நீ***
***வெட்கப்பட்டு போவதில்லை***
***கஷ்டங்கள் வந்தாலும்***
***இழப்புகள் வந்தாலும்***
***தீமைகள் சூழ்ந்தாலும்***
***இழந்ததை திரும்பவும்***
***தருவேன்***
***- நான் . . .***

உங்கள் விசுவாசத்ததை பின்வருமாறு அறிக்கை செய்யுங்கள்.

**நான் பயப்பட மாட்டேன்.**
**கர்த்தர் என்னோடு இருக்கிறார்**
**நான் வெட்கப்பட்டு**
**போவதில்லை.**

**தேவனுக்கே மகிமை !**

**TVGM சிறுவர் இல்ல தேவைகள் !**

1. பெரிய குளிர்சாதன பெட்டி ( Fridge)
2. இன்வெட்டர் ( Invetor )
3. கேஸ் ஸ்டவ் ( பெரிய அளவு )
4. Emergency light – 5
5. சாப்பாட்டு அறை டெஸ்க், பெஞ்ச் – ஸ்டீபல்
6. ஸ்டீல் பீரோக்கள் – 2
7. ஸ்டீல் கட்டில்கள்

நமது சோமரசம்பேட்டை சிறுவர் இல்லத்தில் பிள்ளைகள் மேற்படிப்பு படிக்க வந்துள்ளதால் அவர்களுக்கு சில வசதிகள் செய்து கொடுக்க வேண்டிய கட்டாய நிலையில் உள்ளோம். ஜெபியுங்கள்.

**பேங்க் விபரம் : பக்கம் 16**

## இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

**உன் ஊழியத்தை நிறைவேற்று.** 2 **தீமோ.** 4 : 5

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு** "**100 - கிராம ஊழியம்**" திட்டத்தின் மூலம் '**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**' இலவசமாக வழங்கி **இயேசுவை** அறிவித்தல்.

## திருச்சி மாவட்டம் - மணச்சநல்லூர் யூனியன்

# 100 - கிராம ஊழியம்

**நோக்கம்:** **2011 அக்டோபர் 31** திங்கள் காலை 9 மணி முதல் **நவம்பர் 4** வெள்ளி இரவு 10 மணி முடிய **மணச்சநல்லூர் யூனியன் கிராமப் பகுதிகளில்** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில் இயேசுவை அறிவித்து "**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**" இலவசமாக வழங்கி வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**உபவாச ஜெபம்** : **2011 அக்டோபர் 31** திங்கள் காலை **9 - 1** மணி

**கடைசி நாள் ஜெபம்** : **2011 நவம்பர் 4** வெள்ளி இரவு **7 - 10** மணி

***அக்டோபர் 31 முதல் நவம்பர் 4 வரை தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:***

**உபவாச ஜெபம் நடைபெறும் இடம்**

**சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர்,** TVGM
C/o. **சி.எஸ்.ஐ. தூய லூக்கா ஆலயம்**
**பாப்பாத்தி குளம், எதுமலை ரோடு,**
**மணச்சநல்லூர் - 621 005.**
**திருச்சி மாவட்டம். செல்:** 94443 94991

**நன்றி :** உதவி செய்ய முன் வந்த Rev. **அருள்சிங்** அவர்களுக்கும், சி.எஸ்.ஐ. கமிட்டி / சபை உறுப்பினர்களுக்கும் நன்றி!

**தகுதி** : ஆலயமில்லாத கிராமங்களில் **5** நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த **18** வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

**பிரயாணப்படி :** தமிழ்நாட்டிலிருந்து ரூ. **5** செலுத்தி, அனுமதி தபால் பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். வேறு உதவித்தொகையோ, அன்பளிப்போ கிடையாது.

**முக்கிய அறிவிப்பு :** 1. இது ஒரு கௌரவ, தியாக சேவையாகும்.
**எக்காரணத்தை முன்னிட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.**
2. இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையை நிறைவேற்ற ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மட்டும் 100 - கிராம ஊழியத்திற்கு வாருங்கள்.

**சகல தொடர்புகளுக்கும் :** சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர்,
**100 - கிராமம்,** திருச்சி - 620 102. **Ph : 0 - 431-2607241, 94449 80445**

# கடலூர் மாவட்டம் - பரங்கிப்பேட்டை யூனியன்
# 100-கிராம ஊழிய அறிக்கை

**நாள் : 12.09.2011 - 16.09.2011** . . . *சகோ. பன்னீர்செல்வம்*



கர்த்தருடைய கிருபையினால் கடலூர் மாவட்டம் – **பரங்கிப்பேட்டை** யூனியனில் 12.09.2011 திங்கள் முதல் 16.09.2011 வெள்ளி வரை 100–கிராம ஊழியம் ஆசீர்வாதமாக நடைபெற்றது.

முதல் நாள், கடைசிநாள், கூடுமிடம், உணவு, இனிப்பு, பார்சல் செலவுகளை சிதம்பரம் – **நல்ல மேய்ப்பன் சபை** போதகர்கள் **காபிரியேல், மைக்கேல், சைமன்** ஆகியோர் பொறுப்பெடுத்துக் கொண்டு உதவி செய்தார்கள்.

தமிழ்நாட்டின் பல மாவட்டங்களிலிருந்து 49 கிராம ஊழியர்கள் வந்து ஊழியம் செய்தார்கள். முதல் நாள் ஜெபத்தில் பரங்கிப்பேட்டை யூனியனில் உள்ள கிராமங்களின் பெயர்களையெல்லாம் வாசித்து ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. TVGM ஸ்தாபகர் சகோ. P.T.கிறிஸ்டோபர் அவர்கள் ஜெபத்தில் நடத்தி கிராம ஊழியர்களை உற்சாகப்படுத்தினார்கள். **பாஸ்டர் காபிரியேல்** தேவசெய்தியளித்தார்கள்.

பின்பு கிராம ஊழியர்களை 12 குழுக்களாக பிரித்து, ஒவ்வொரு குழுவினரும் தாங்கள் ஊழியம் செய்யப் போகிற கிராமங்களுக்காக ஜெபித்தார்கள். நடராஜபுரம் – **நல்லமேய்ப்பன் சபை** சார்பாக மதியவிருந்து அளிக்கப்பட்டது. இதன் பின் ஊழியர்கள் அவரவர் ஊழியம் செய்ய வேண்டிய கிராமங்களுக்கு ஜெபத்துடன் கடந்து சென்றார்கள்.

இவர்கள் போய் கிராமங்களில் கிடைக்கிற இடங்களில் தங்கிக் கொண்டு அங்குள்ள வீடுகளில் யோவான் சுவிசேஷம், கைப்பிரதி, சிலுவைக்கொடி இலவசமாக கொடுத்து சுவிசேஷத்தை அறிவித்தார்கள்.

இந்த ஊழியத்தின்போது மொத்தம் 11,125 யோவான் சுவிசேஷப்புத்தகங்கள், 10,000 **“இயேசுவே இரட்சகர்”** கைப்பிரதிகள், 5000 மற்ற கைப்பிரதிகள், 400 **“நம்மில் வாழ்ந்த அவர்”** புத்தகங்கள் இலவசமாக வழங்கப்பட்டன. 235 புறமத நண்பர்கள் தங்கள் முகவரியை கொடுத்து வேதபாடங்களை தபால் மூலம் அனுப்பக் கேட்டார்கள்.

கிராம ஊழியர்கள் 5 நாட்கள் ஊழியங்களை முடித்து, மீண்டும் நல்ல மேய்ப்பன் சபையில் கூடி கர்த்தர் தங்களை கிராமங்களில் எப்படியாக நடத்தினார் என்பதை சாட்சியாக சொல்லி தேவனை மகிமைப்படுத்தினார்கள். ஊழியர்களுக்கு பிரயாணப்படியும், இனிப்பும் வழங்கப்பட்டது. நல்ல மேய்ப்பன் சபையார் இரவு விருந்தளித்தார்கள். பின்பு ஊழியர்கள் அவரவர் ஊர்களுக்கு மகிழ்ச்சியுடன் திரும்பி சென்றார்கள்.

***கிராம ஊழியர்களின் அனுபவ சாட்சிகளை வாசித்து தேவாதி தேவனை மகிமைப்படுத்துங்கள் ! ***

# கிராம ஊழியர்களின் அனுபவ சாட்சிகள்

**குழு 1 - சகோதரர்கள்: மாற்கு மாரியப்பன், ஜெயக்குமார், அலெக்ஸ் சுந்தர்ராஜ், மகாராஜன்.**

**ஆயிபுரம்** ஊராட்சியிலுள்ள 15 கிராமங்களில் வீடுகள்தோறும் யோவான் சுவிசேஷம் கொடுத்தோம். யாவரும் சந்தோஷமாக வாங்கிக் கொண்டார்கள். மொத்தம் 1000 யோவான் சுவிசேஷங்கள், 820 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 2 - சகோதரர்கள்: ஜீவானந்தம், ஏசுராஜா, அந்தோணி, ஸ்டான்லி.**

**முட்லூர், கொடிக்கால்நகர், ஆதிவராகநல்லூர்** போன்ற கிராமங்களில் வீடுகள்தோறும் யோவான் புத்தகம் கொடுத்து சுவிசேஷம் அறிவித்தோம். அநேக புறமத நண்பர்களும் ஆர்வமுடன் சுவிசேஷப் புத்தகத்தை வாங்கினார்கள். சுவிசேஷத்தை சந்தோஷமாக ஏற்றுக் கொண்டார்கள். மொத்தம் 975 யோவான் சுவிசேஷங்கள், 850 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 3 - சகோதரிகள் : செல்லக்கனி, எஸ்தர் எபிநேசர், பிச்சையம்மாள், தேவபாக்கியம்.**

எங்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த கிராமங்களில் வீடுகள்தோறும் யோவான் புத்தகம் கொடுத்தபோது, யாவரும் சந்தோஷமாக வாங்கிக் கொண்டார்கள். பல வீடுகளில் எங்களை அழைத்து ஜெபிக்கச் சொன்னார்கள். **கரிக்குப்பம்** என்ற கிராமத்தில் ஒருவர் சுவிசேஷப் புத்தகம் கொடுக்கக் கூடாது என தடைப் பண்ணினார். நாங்கள் அடுத்த கிராமத்திற்கு சென்றோம். மொத்தம் 1000 யோவான் சுவிசேஷங்கள், 850 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 4 - சகோதரிகள்: லூயிஸ், அபியேல் அந்தோணியம்மா, கிளமெண்ட்ஸ்மேரி, தெபோராள்.**

எங்களுக்கு ஊழியத்தில் எந்த தடையும் இல்லை. வீடுகள்தோறும் யோவான் புத்தகம் கொடுத்தோம். பிசாசு போராட்டத்தினால் கஷ்டப்பட்ட ராணி என்ற சகோதரிக்காக ஜெபித்தோம். கர்த்தர் விடுதலை கொடுத்தார். இடுப்பு வலியால் கஷ்டப்பட்ட ஒரு பெண்ணுக்காக ஜெபித்தபோது, கர்த்தர் சுகம் கொடுத்தார். மொத்தம் 1000 யோவான் சுவிசேஷங்கள், 800 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 5 - சகோதரர்கள்: பிரேம்ஆனந்த், ஆசீர்பாண்டி, ஜார்ஜ், மைக்கேல், பாபு சாலமோன்.**

**மணிக்கொல்லை** கிராமத்தில் ஆர்.சி. மக்கள் மத்தியில் சுவிசேஷம் அறிவித்தபோது, 4 பேர் தங்களை கிறிஸ்துவுக்கு ஒப்புக் கொடுத்தார்கள். 7 வருடமாக பிசாசினால் பிடிக்கப்பட்டு சங்கிலியால் கட்டப்பட்டிருந்த ஒருவருக்காக ஜெபிக்கும்படி சொன்னார்கள். இயேசுவின் அன்பைக் கூறி, அவரே விடுதலையாக்குவார் என்று சொல்லி ஜெபித்தோம். முற்றிலும் சுகமானால் சபைக்கு வருகிறோம் என்றார்கள். மொத்தம் 950 யோவான் சுவிசேஷங்கள், 800 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 6 - சகோதரிகள் : அன்னாள், ரெபேக்கா லட்சுமி, லூர்துமேரி, சலோமி சம்மனசு.**

**பெரியப்பட்டு** கிராமத்தில் சுவிசேஷப் புத்தகம் கொடுத்த போது, யாவரும் அன்பாக ஏற்றுக் கொண்டார்கள். **பஞ்சக்குப்பம்** கிராமத்திலுள்ள எல்லா

வீடுகளிலும் சுவிசேஷம் அறிவித்தோம். **வில்லியனூர்** ஊராட்சியில் ஊழியம் செய்தபோது, மூன்று வாலிபர்கள் சுவிசேஷம் சொல்லக் கூடாது என வழி மறித்தார்கள். நாங்கள் வேறு வழியாக கடந்து சென்றோம். மொத்தம் 1120 யோவான் சுவிசேஷங்கள், 850 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 7 - சகோதரிகள் : ஷீலா அம்மாள், எஸ்தர் கனகாம்புஜம், அந்தோணிமேரி,**

நாங்கள் சென்ற கிராமங்களில் மக்கள் எங்களை அன்போடு வரவேற்று யோவான் புத்தகம் வாங்கிக் கொண்டார்கள். ஒரு சிலர் வேண்டாம் என்றார்கள். சுவிசேஷத்தைக் கேட்ட மக்களில் சிலர் இயேசு சபைக்கு வருவோம் என்றார்கள். மொத்தம் 1000 யோவான் சுவிசேஷங்கள், 850 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 8 - சகோதரர்கள் : யோசுவா, ஜெபமலைநாதன், பீட்டர் ராமலிங்கம், ஜோசப் முரளிதரன்.**

**சின்னகொமட்டி** கிராமத்தில் தங்கியிருந்து, சுற்றியுள்ள கிராமங்களில் ஊழியம் செய்தோம். அநேக மக்களுக்குள் இருந்த அசுத்த ஆவிகள் வெளியேறியது. அநேகருக்கு நோய்கள் குணமடைந்தது. நாங்கள் சிறப்பாக ஊழியம் செய்ய கர்த்தர் கிருபை செய்தார். **குத்தாபாளையம்** கிராமத்தில் ஒருவர் இயேசு யார்? என்னிடம் அவரைக் காட்டுங்கள். நான் பூசாரி என்றார். நாங்கள் இவருக்கு இயேசுவைப் பற்றி கூறினோம். மொத்தம் 1100 யோவான் சுவிசேஷங்கள், 870 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 9 - சகோதரிகள் : லீதியாள், மேரி செல்லாபாய், மணியம்மாள், தேவகிருபை.**

எங்களுக்குக் கொடுக்கப்பட்ட கிராமங்களில் இயேசுவின் நற்செய்தியை கூறினோம். ஜனங்கள் அன்போடு கேட்டு, எங்களுக்காக ஜெபியுங்கள் என்றார்கள். நாங்கள் ஜெபித்தோம். ஒருவர் மட்டும் யோவான் புத்தகம் வேண்டாம் என்றார். மற்ற எல்லோரும் வாஞ்சையோடு பெற்றுக் கொண்டார்கள். மொத்தம் 1000 யோவான் சுவிசேஷங்கள், 830 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 10 - சகோதரிகள் : கஸ்தூாி, மேரிமீனா, மரியாள், எஸ்தர் பேபி.**

**பிச்சாவரம்** கிராமத்தில் தங்கியிருந்து, சுற்றியுள்ள கிராமங்களில் இயேசுவை அறிவித்தோம். ஒரு வாலிப பெண் இயேசு சாமியை நாங்க கும்பிட மாட்டோம், இது வேண்டாம் என்றாள். சில வீடுகளில் எங்களை கூப்பிட்டு அவர்கள் பிரச்சனைகளைக் கூறி ஜெபிக்கக் கேட்டார்கள். ஜெபித்தபோது கர்த்தர் அவர்கள் மனதில் சமாதானத்தைக் கொடுத்தார். மொத்தம் 1000 யோவான் சுவிசேஷங்கள், 825 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 11 - சகோதரிகள் : ஜோதிமணி, ரோணிக்கம்,கிருபா பழனியம்மாள், சாரதா.**

நாங்கள் சென்ற கிராமத்தில் அதிக வரவேற்பும் இல்லை, எதிர்ப்பும் இல்லை. **தச்சக்காடு** கிராமத்தில் மக்கள் யோவான் புத்தகத்தை வாங்க மறுத்தனர். வியாதி, பில்லிசூன்யத்தால் பாதிக்கப் பட்ட மக்களுக்காக ஜெபித்தோம். மொத்தம் 1000 யோவான் சுவிசேஷங்கள், 870 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 12 - சகோதரர்கள் : பால்ராஜ், சூசைமாணிக்கம், ஆபிரகாம், ஜான் அழகப்பன்.**

**அம்மாபேட்டை** கிராமத்தில் ஊழியம் செய்தபோது, பில்லிசூன்யத்தால்

பாதிக்கப்பட்டிருந்த ஒரு வாலிப பெண்ணுக்காக ஜெபித்தோம். இயேசு உடனே விடுதலையைக் கொடுத்தார். பிசாசின் கிரியைகள் முற்றிலும் விலகியது. பிரகாஷ் என்ற வாலிப சகோதரன் கார் விபத்தில் அடிப்பட்டு பேச முடியாமல், கால் உடைந்த நிலையில் வீட்டிலிருந்தார். அவரை சந்தித்து இயேசுவைப் பற்றி கூறி ஜெபித்தோம். இந்த குடும்பத்தார் யாவரும் உடனே இயேசுவை ஏற்றுக் கொள்வதாகக் கூறி தங்களை ஒப்புக் கொடுத்தார்கள். மொத்தம் 1000 யோவான் சுவிசேஷங்கள், 785 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**தேவனுக்கே மகிமை !**

## 2011 நவம்பர் மாத இயேசுவை விரும்புவோர் முகாம்

மாவட்டம் : சேலம்
யூனியன் : கொளத்துார்
நாள் : 12.11.2011
நேரம் : காலை 9 மணி

### கூடுமிடம்

**பாஸ்டர் பால் விக்டர்**
**பாஸ்டர் ஜெயம் ஜோசப்**
G.F.W.**ஜெபவீடு**
**குரும்பனுார் கிராமம்**
**கொளத்துார் போஸ்ட்**
**மேட்டூர் தாலுகா**
**சேலம் மாவட்டம்**
**செல் : 97505 95939**
**94897 77442.**

**குறிப்பு :** கொளத்துார் யூனியனில் இயேசுவைக் குறித்து அறிந்து கொள்ள வாஞ்சிக்கும் யாவரையும் **அன்புடன் அழைக்கிறோம்.** முகாமின் முடிவில் கலந்து கொள்ளும் யாவருக்கும் தனித் தனியாக ஜெபம் ஏறெடுக்கப்படும்.

## 2011 செப்டம்பர் மாத இயேசுவை விரும்புவோர் முகாம் அறிக்கை



கர்த்தருடைய கிருபையால் ஈரோடு மாவட்டம் – கோபிசெட்டிப் பாளையம் யூனியன் I.P.A. சபையில் 24.09.2011 அன்று **"இயேசுவை விரும்புவோர் முகாம்"** நடைபெற்றது. அழைப்புக்கடிதம் பெற்றுக்கொண்டவர் களில் 5 பேர் மாத்திரம் ஆர்வமுடன் வந்து கலந்து கொண்டார்கள். இவர்களில் மூன்று பேர் வைராக்கியமான இந்துமார்க்கத்தைச் சேர்ந்தவர்கள். புதிதாக இயேசுவை அறிந்து கொண்டு சபைக்கு செல்கிறார்கள். TVGM லிருந்து அனுப்புகிற **தமிழ்கிராமங்களுக்கு சுவிசேஷம் பத்திரிகை** மற்றும் **வேத பாடங்கள் இயேசுவின் மேல் விசுவாசம்** வைப்பதற்கு உதவியாக இருந்தது என்று தெரிவித்தார்கள்.

இவர்கள் தங்கள் குடும்பத்தின் ஆசீர்வாதங்களுக்காக ஜெபிக்கச் சொன்னார்கள். I.P.A. பாஸ்டர் பெரியநாயகம்அவர்கள் ஜெபித்தார்கள். இவர்களுக்கு ஆவிக்குரிய புத்தககமும் 'நம்மில் வாழ்ந்த அவர்' என்ற இயேசுவின் வாழ்க்கை வரலாறு புத்தகமும் இலவசமாக வழங்கப்பட்டது. மேலும் TVGM சார்பில் மதிய உணவு கொடுக்கப்பட்டது.

**தேவனுக்கே மகிமை !**

# இயேசுகிறிஸ்துவே கர்த்தர்

## துதி,கனம், மகிமை – இயேசுகிறிஸ்துவுக்கே!

**பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்.**

## புறமத நண்பர்கள் எழுதிய சாட்சிகளின் சில வரிகள்

**சகோதரி பானுபிரியா, புதுகை.**

நீங்கள் அனுப்பும் புத்தங்களில் வரும் வசனம் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியையும், மனநிறைவையும் தருகிறது. என் அக்கா B.Ed. தேர்வில் பாஸாக வேண்டுமென்று ஜெபிக்கக் கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தருடைய கிருபையால் அக்கா பாஸாகி விட்டாள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

**சகோதரி நான்சி**

நீங்கள் அனுப்பும் புத்தகத்தின் கருத்துக்கள் என் வாழ்க்கைக்கு பயனுள்ளதாக உள்ளது. நான் பத்தாம் வகுப்பில் 457 மதிப்பெண்கள் எடுத்து வெற்றி பெற கர்த்தர் கிருபை செய்தார்.

**சகோதரி அனிதா, நீலகிரி.**

என் தங்கையின் திருமணம் நன்றாக முடிந்தது. தேவனுக்கே மகிமை.

## விசுவாசிகள் எழுதிய சாட்சிகளின் சில வரிகள்

**சகோ. ஞானசாமி, சென்னை.**

என் கால் விரலில் கட்டி இருக்கிறது என ஜெபிக்கும்படி கடிதம் எழுதினேன். உங்களிடமிருந்து பதில் கடிதம் வருவதற்கு முன்பே விரலில் உள்ள கட்டி சுகமானது. தேவனுக்கே மகிமை!

**சகோதரி சுகிதா, நெய்யூர்.**

என் அம்மாவிற்கு கர்ப்பப்பை சம்பந்தமான பிரச்சனை இருந்தது. அதை remove பண்ண வேண்டும் என்று மருத்துவர்கள் கூறினார்கள். வயதான காலத்தில் ஆப்பரேஷன் செய்தால் எப்படியிருக்குமோ என கலங்கினோம். அப்போது நான் அம்மாவிற்கு நல்லபடியாக ஆப்பரேஷன் முடிய வேண்டும் “100–கிராம ஊழியம்” பத்திரிகையில் சாட்சி எழுதுகிறேன் என பொருத்தனையோடு ஜெபித்தேன். கடந்த ஜுலை 29ம் தேதி எந்த பிரச்சனையும் இல்லாமல் ஆப்பரேஷன் நல்லபடியாக முடிய கர்த்தர் கிருபை செய்தார். மேலும் என்னுடைய மகள் சளி பிரச்சனையால் கஷ்டப்பட்டு கொண்டிருந்தாள். மருத்துவமனையில் மருந்து வாங்கியிருந்தோம். ஒரு மாதம் கழித்து செக்கப் போக அவளுடைய மெடிக்கல் ரிப்போர்ட் வீட்டில் தேடி பார்த்து கிடைக்கவில்லை. அப்போதும் நான் 100–கிராம ஊழியம் பத்திரிகையில் சாட்சி எழுதுவதாக ஜெபித்துவிட்டு தேடினேன். ஆச்சரியமாக ரிப்போர்ட் கிடைத்தது. ஜெபத்தைக் கேட்ட தேவாதி தேவனுக்கு ஸ்தோத்திரம்.

**குறிப்பு :** அநேக கிராம மக்களுக்கு வேதபாடம் அனுப்புவது சம்பந்தமாக மாதந்தோறும் ஆயிரம் கடிதங்கள் எழுத வேண்டியுள்ளது. ஆதலால் எங்களிடம் நீங்கள் மாடல் கடிதம் பெற்று வீட்டிலிருந்தே பல போஸ்ட் கார்டுகள் எழுதி எங்களுக்கு உங்கள் காணிக்கையாக அனுப்பி ஊழியத்திற்கு உதவி செய்யலாம்.

## கன்னியாகுமரி மாவட்ட TVGM அறிமுகப்பணி அலுவலகம் 2011 செப்டம்பர் மாத ஊழிய அறிக்கை

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் செப்டம்பர் மாத ஊழியங்கள் வெற்றியாய் முடிந்தன.

பலவிதமான தடைகள், போராட்டங்கள் எதிரிட்டு வந்தாலும் கர்த்தர் துணை நின்று பெலப்படுத்தி, ஊழியங்கள் தடையின்றி நடைபெற கிருபை செய்தார். நாங்கள் நேரில் சென்று சந்திக்கும் அநேக குடும்பங்களில் ஜீவனுள்ள சாட்சிகளை கேள்விப்பட்டு தேவனுக்கு மகிமை செலுத்த கர்த்தர் உதவி செய்தார்.

சுவிசேஷ ஊழியம் செய்த இடங்களில் பின்தொடர்பணியும் செய்ய அநுகூலமான வாசல்களை கர்த்தர் திறந்து கொடுத்தார். மேலும் அறிமுகப் பணியின் எல்லைகள் விரிவாக ஜெபத்துடன் முயற்சித்து வருகிறோம். கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார் என விசுவாசிக்கிறோம். **தேவனுக்கே மகிமை !**

**TVGM அறிமுகப்பணி அலுவலகம்**
**5 / 3A** கிரவுண் தெரு,
வாத்தியார் விளை,
நாகர்கோவில் – 629 001

கிறிஸ்துவின் பணியில்,
**N.ஷோபனா இவாஞ்சலின்**
செல்: **98658 26424**
போன் : 04652 - 277251

**TVGM தலைமை அலுவலகம்**
போன் : 0431 - 2607241 செல் : 94449 80445 , 94435 44628
Email : 100village@tvgm.org Web : www.tvgm.org

## TVGM ஏலீம் சிறுவர் இல்லம் - சோமரசம்பேட்டை



2011 செப்டம்பர் மாதத்தில் சகோ. ஆரோக்கியராஜ் தங்கள் உறவினர் சகோதரி சுஜிதாவின் பிறந்தநாளை முன்னிட்டும், சகோதரி ரீட்டா மற்றும் சகோ. சாமியப்பன் ஆகியோர் தங்கள் மகனுடைய பிறந்தநாளை முன்னிட்டும், TVGM -க்கு நேரடியாக வந்து சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்கு சிறப்பு உணவளித்தார்கள். நன்றி.

**நன்றி ! ஆகஸ்டு : பாஸ்டர் ஜான் முத்து, சகோ. சத்தியமூர்த்தி, சகோ.ஜேம்ஸ் ஜான்சன், சகோ. மாணிக்கம்.**

**செப்டம்பர் : சகோ. ஸ்ரீராம், சகோ. ராஜசேகர், சகோ. கிளமெண்ட் அமர்நாத், சகோதரி சுலோச்சனா, சகோ. ஜெயசீலன்,**

**அன்பின் வேண்டுகோள் :** உங்கள் பிறந்தநாள், திருமணநாள் மற்றும் முக்கிய நிகழ்ச்சிகளை முன்கூட்டியே எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். ஜெபிக்கிறோம்.

## “100 - கிராம ஊழியம்” பத்திரிகை வாசகர்களுக்கு எங்கள் அன்பின் கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள்!

**கிறிஸ்மஸ் நாட்களில் TVGM சிறுவர் இல்லப் பிள்ளைகள், ஊழியர்கள்,தொழுநோயாளர்கள், விதவைகளை நினைவுகூருங்கள்!**

| | |
|---|---|
| குண்டல் சிறுவர் இல்லத்திலுள்ள 15 பிள்ளைகளுக்கு ரூ. 300 வீதம் கிறிஸ்மஸ் துணி | – ரூ. 4,500 |
| திருச்சி சிறுவர் இல்லத்திலுள்ள 50 பிள்ளைகளுக்கு ரூ. 300 வீதம் கிறிஸ்மஸ் துணி | – ரூ. 15,000 |
| தலைமை அலுவலகம் மற்றும் கிளை அலுவலகத்தில் பணிபுரியும் 35 பேருக்கு அன்பளிப்பு | – ரூ. 35,000 |
| தலைமை அலுவலகத்தில் பணிபுரியும் 6 குடும்பம் | – ரூ. 12,000 |
| 100 கிராம ஊழிய தன்னார்வ தொண்டர்கள் 60 பேருக்கு (துணி & அன்பளிப்பு) | – ரூ.30,000 |
| சூறாவளிப்பட்டி விதவைகள் மற்றும் முதியோர்கள் 40 பேருக்கு உணவு, துணி | – ரூ.12,000 |
| பஞ்சப்பூர் தொழுநோயாளர் 60 குடும்பத்தினர் உணவு, துணி | – ரூ.60,000 |
| தலைமை அலுவலக கிறிஸ்மஸ் நிகழ்ச்சி & சிறப்பு உணவு 300 பேருக்கு (உத்தேசமாக) | – ரூ.30,000 |
| மொத்தம் | – **ரூ.1,98,500** |

**இம்மாபெரும் தேவையில் உங்கள் பங்கை நிறைவேற்றுங்கள்!**

**நன்றி :** கடந்த ஆண்டில் கிறிஸ்மஸ் தேவைகளை கர்த்தர் அற்புதமாக சந்தித்தார். ஜெபித்த, கொடுத்த, உழைத்த ஒவ்வொருவருக்கும் நன்றி.

## 100 - கிராம ஊழிய சகோதரி ஞானசெல்வம் அவர்களின் முதலாமாண்டு ஸ்தோத்திரக் கூட்டம்

மரண நாள் : 28.09.2010 நினைவு நாள் : 28.09.2011

**சகோதரி ஞானசெல்வம்** அவர்கள் 100–கிராம ஊழியர் மாத்திரமல்ல. மதுரையில் TVGM அறிமுகப்பணியாளராக தானாகவே செயல்பட்டு மாதந்தோறும் குறைந்தபட்சம் ரூ. 3000/– அனுப்பி வந்தார்கள். இவர்களுடைய **முதலாமாண்டு நிறைவு ஸ்தோத்திரக்கூட்டத்தில்** எனக்கு பேசுவதற்கு வாய்ப்பளித்தார்கள்.

**2011 டிசம்பர்** மாத பத்திரிகையில் **மதுரை டாக்டர் மாலினி ஜெயசிங்** சகோதரி ஞானசெல்வத்தை குறித்து எழுதும் நற்சாட்சியை வெளியிடுகிறோம். கட்டாயமாக படியுங்கள்.

. . . P.T. **கிறிஸ்டோபர்**

## SRI LANKA VILLAGE GOSPEL MISSION (SLVGM)

124 / 3, Nursing Home Road, Hatton , Sri Lanka. 0094512222489



### 24 மணி நேர ஜெபசங்கிலி :

**ஜெபமே** அறியப்படாத இடங்களில் அறியப்பட கதவை திறக்கிற சாவியாக உள்ளது. ஒவ்வொரு வாரமும் புதன்கிழமை ஜெபசங்கிலி இரவு 12 மணிக்கு ஆரம்பித்து, வியாழன் இரவு 12 மணிக்கு முடிவடைகிறது. ஜெபவீரர்கள் இந்த திட்டத்தில் இணைவது எங்களை மிகவும் உற்சாகப்படுத்துகிறது. ஜெபசங்கிலியின் நோக்கம்: இலங்கையிலுள்ள 30,000 கிறிஸ்துவை அறியாத கிராமத்திலுள்ள ஜனங்கள் கடவுளை தேடவும், அவர் கிருபையை கண்டடைவதுமே ஆகும்.

ஒவ்வொரு ஜெப பங்காளருக்கும் ஜெப கையேடு கொடுக்கப்பட்டுள்ளது. இந்த ஜெப சங்கிலியை இன்னும் அநேகர் இணைய ஆவலோடு காத்திருக்கிறோம். நீங்களும் இந்த திட்டத்தில் இணைந்து உங்கள் வசதிப்படி ஒரு மணி நேரம் ஜெபிக்க விரும்பினால் தயவுகூர்ந்து தெரியப்படுத்துங்கள். நாங்கள் அதிகாலை 1 மணியிலிருந்து 5 மணி வரை தேவைப்படும் ஜெபவீரர்கள் பட்டியலில் உங்களை இணைத்துக் கொள்கிறோம்.

12 வயதுள்ள லோரின் என்ற சிறுபெண் எங்களுடைய மிஷனெரி கூட்டத்தில் இந்த ஜெபசங்கிலியில் இணைந்தாள். நம்ம முடியாத அளவிற்கு ஒவ்வொரு நாளும் மாலை 5.30 முதல் 7.30 வரை ஜெபித்து வருகிறாள்.

தேவன்தாமே இழந்து போன ஆத்துமாக்களுக்கு பாரத்தோடும், மனஉருக்கத்தோடும் ஜெபிக்க அநேக இளைஞர்களையும் , முதியோர்களையும், எழுப்புவாராக! **உங்கள் பதில் என்ன ?**

உங்களுடைய ஜெபத்திற்கும் உதவிக்கும் நன்றி .

உங்கள் காணிக்கைகளை SRILANKA VILLAGE GOSPEL MISSION
A/c No : 015010013698, Hatton National Bank, Hatton பெயரில் அனுப்புங்கள்.

மேலும் விபரங்களுக்கு :

The Ven.Nimal Wickramaratne - Chairman 072 5898529
The Rev. John Isaiah - Secreatary 077 4071693
Mrs. Sheila De Soysa - Treasurer 052 2235290

**P.T.Christopher**-Founder Patron - 0091- 431- 207241, H/P:94435 44628
TAMIL VILLAGE GOSPEL MISSION, SOMARASAMPETTAI, TRICHY.620 INDIA



சகோ. A.S தர்மராஜ் – சாட்சி
நியூ செண்பகம் ஆப்செட் – சிவகாசி



சகோ. சுரேந்திரகுமார் - சாட்சி
OVGM Director - **Orissa**

**மிகவும் சிறியவர்களாகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்.** மத்.25:40

# பிள்ளைகளின் படிப்பு செலவுகளை தாங்குவதற்கு கர்த்தருடைய பிள்ளைகள் தேவை !

TVGM சிறுவர் இல்ல மாணவன் ***முருகேசன்*** *( தாய் , தகப்பன் , சகோதரி, சகோதரன் இல்லாத பிள்ளை )* . முதல் முறையாக திருச்சி - புத்தூர் ITI ல் Elecrician Course படித்து வருகிறார்.

மேலும் ஒரிஸா OVGM Managing Trustee மகன் **இரண்டுபேர்** ஆங்கில மீடியத்திலும் , தாய் தகப்பனை இழந்த சகோதரி **யோகேஸ்வரி** நர்சிங் கோர்ஸிலும் இராஜபாளையத்தில் படித்து வருகிறார்கள்.

பஞ்சப்பூர் ***சகோ. மகாமுனி*** DCE படித்து வருகிறார்.

மேலும் நமது TVGM ஊழியர்களின் பிள்ளைகள் ***சாமுவேல்*** ( B.Sc. Computer Science - Bishop Heber College ) , ***ரெபுணி*** (Nursing Course - M.I.O.T - Chennai ) படித்து வருகிறார்கள்.

இதுபோக நம்முடைய சிறுவர் இல்லத்திலுள்ள 70 பிள்ளைகள் ஆரம்ப மற்றும் உயர்நிலைப் பள்ளியிலும் கல்வி பயின்று வருகிறார்கள். மேலும் அறிமுகப்பணியாளர் சகோ. ஆரோக்கியம் அவர்களின் பிள்ளைகள் பைபிள் ஸ்கூலிலும் படித்து வருகிறார்கள்.

இவர்களுடைய படிப்பு பீஸ் கட்டணம் ஆண்டுக்கு ரூ. 100,000த்துக்கு மேல் வருகிறது. கர்த்தர் கிருபையாக ஒவ்வொரு பிள்ளைகளுடைய தேவைகளை சந்திக்கும்படி ஜெபியுங்கள்.

மேற்கண்ட பிள்ளைகள் ஒவ்வொருவரையும் பொருளுதவியினால் தாங்க கர்த்தருடைய பிள்ளைகள் முன்வர ஜெபியுங்கள். ஒவ்வொரு வருடைய படிப்பு பீஸ் விபரங்கள் மிக வித்தியாசமாக இருப்பதால் கர்த்தரால் வழிநடத்தப்படுபவர்கள் உங்கள் வசதிக்கேற்ப பொது காணிக்கையாகவோ அல்லது குறிப்பிட்ட நபருக்கோ கொடுத்து உதவும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

***காணிக்கை அனுப்ப வேண்டிய விபரம் :***

**The Ambassador School of Learning (TASOL)**

SB. A/c **: 12491010 - 38110** Canara Bank, Code : 1249
Puthur, Trichy - 620 017

காணிக்கை அனுப்பிய விபரங்களை தயவாய் எங்களுக்கு தெரியப்படுத்தி உதவுங்கள்.

***குறிப்பு :*** TVGM சிறுவர் இல்லப் பிள்ளைகளை உல்லாச பயணம் அழைத்து செல்ல விரும்புகிறோம். தனி பஸ், உணவு கட்டணம் தேவை. ஜெபியுங்கள்.

**தினமும் ஒரு நிமிடமாவது ஜெபிப்பீர்களா?**

"**இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்**". **1தெச.** 5:17

# தினசரி ஜெபக்குறிப்புகள்

**வாசிக்கும்போதெல்லாம் தேவனை ஸ்தோத்தரியுங்கள் !**

**திங்கள்:** ஒரிஸாவில் ஒரு லட்சம் கைப்பிரதிகள் வினியோகத் திட்டத்தின் மூலம் அநேக மக்கள் "**இயேசுவே இரட்சகர்**" என அறிந்து கொள்ளவும், கர்த்தருக்கு சாட்சியாக எழும்பவும் ஜெபியுங்கள்.

**செவ்வாய்:** மத்திய பிரதேசத்தில் **நாக்பூரை** மையமாக வைத்து **ஒரு லட்சம் கைப்பிரதிகள்** வினியோகிப்பது தேவசித்தமானால் அதற்குரிய வாசல் களை கர்த்தர் திறக்கும்படியாக ஜெபியுங்கள்.

**புதன் :** "**நம் மத்தியில் வாழ்ந்த அவர் – இயேசுகிறிஸ்து** " என்ற புத்தகம் **ஒரு லட்சம் மாணவர் களுக்கு இலவசமாக வழங்க** அநேக பள்ளி தலைமை ஆசிரியர் களும் , கல்லூரி முதல்வர்களும் மனமுவந்து முன்வர ஜெபியுங்கள்.

**வியாழன் :** இந்த வருடத்தில் புதிதாக ஒரிஸா மாநிலத்தில் நிலம் TVGM பெயரில் வாங்கப்பட்டு, ஜெப வீடு கட்டப்படுவதற்கு ஜெபியுங்கள். ஏற்ற காலத்தில் சிறுவர் இல்லம் ஆரம்பிக்கப்பட ஜெபியுங்கள்.

ஒரிஸாவிலும் , மற்ற மாநிலங் களிலும் ஜெபவீடு கட்டி தரும்படியாக பலர் விண்ணப்பித்துள்ளனர். தமிழ் நாட்டிலும் அநேகர் கேட்டுள்ளார்கள். கர்த்தர் வாசலை திறக்க ஜெபியுங்கள்.

**வெள்ளி :** TVGM / TASOL வருடாந்திர கணக்குகள் 2011 அக்டோபர் 31க்குள் தணிக்கை செய்யப்பட்டு, வருமானவரி அலுவல கத்திற்கு சமர்ப்பிக்கப்பட ஜெபியுங்கள்.

**சனி :** TVGM மற்றும் TASOL ஊழியத்தில் வருங்கால தரிசனத்திற் காக நாம் முன்பணமாக செலுத்தி வாங்கியுள்ள நிலங்கள் மற்றும் உபகரணங்களுக்காக தேவனைத் துதியுங்கள். அதே நேரத்தில் நாம் திரும்ப செலுத்த வேண்டிய பணங்களை அதனதன் காலங்களில் கர்த்தர் கிருபையாக கட்டளையிடும் படி ஜெபியுங்கள்.

**ஞாயிறு :** TVGM தலைமை அலுவலகத்தில் சேவை செய்ய முன் அனுபவமுள்ள கர்த்தருடைய பிள்ளைகள் கிடைக்க ஜெபியுங்கள்.

1. டெம்போ டிராவல் டிரைவர்
2. சமையல் பணியாளர் – பெண்கள்
3. வாட்ச்மேன்
4. தோட்ட வேலையாளர்
5. வெட்சைட் டிசைனர்
6. தமிழ், ஆங்கிலம், கம்ப்யூட்டர் அனுபவம் உள்ளவர்கள்
7. சிறுவர் இல்ல வார்டன் – பெண்கள்
8. கிராம ஊழியர் குடும்பம்

உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில்
தேவன் பிரியமாயிருக்கிறார். 2 கொரி. 9 : 7

காணிக்கை , பத்திரிகை சந்தா, தபால் அனுப்ப வேண்டிய
TVGM தலைமை அலுவலக முகவரி

BRO.STEPHEN CHRISTOPHER C.E.O.
TAMIL VILLAGE GOSPEL MISSION (TVGM)
"1OO-VILLAGE" SOMARASAMPETTAI
TRICHY - 620 102. TAMIL NADU, INDIA.
Ph: 0- 431 - 2607241 Cell : 94449 80445
Email : 100village@tvgm.org Web : www.tvgm.org
Founder : Bro . P.T. Christopher - Cell : 94435 44628

டிராப்ட் , செக், Bank to Bank அனுப்ப வேண்டிய முறை

Canara Bank , Code No: 1249, Puthur Branch, Trichy - 620 017

| நோக்கம் | காணிக்கை அனுப்ப வேண்டிய விபரம் |
|---|---|
| 100 கிராம ஊழியம், யோவான் சுவிசேஷம், பின்தொடர்பணி, ஜெபவீடு கட்டுதல், முழுநேர ஊழியர். | **Tamil Village Gospel Mission**<br>SB. A/c **:12491010 - 23822** Indian Origin<br>SB. A/c **: 12491010 -11947** Foreign National |
| சிறுவர் இல்ல பிள்ளை–களின் பராமரிப்பு, சிறுவர் இல்ல கட்டிடம், மருத்துவ நிதி, தையற்மிஷின், தொழுநோயாளர், விதவைகள், பார்வையற்றோர் , ஏழை, எளியவர் உதவி | **TVGM Social service** ( 80G வரி விலக்கு உண்டு)<br>SB. A/c **: 12491010 - 23805** Indian Origin<br>SB. A/c **: 12491010 - 24967** Foreign National |
| TASOL<br>நிலம் வாங்குதல்<br>உயர் கல்வி நிதி | **The Ambassador School of Learning (TASOL)**<br>(80G வரி விலக்கு உண்டு )<br>SB. A/c **: 12491010 - 38110** Indian Origin only |

ஸ்தாபனத்தின் பெயரில் அனுப்ப முடியா விட்டால் அனைத்து ஊழியங்களுக்கும்
Stephen Christopher SB. A/c **: 12491010 - 18538** Canara Bank
SB. A/c **: 10848511949** State Bank of India , Code : **930** , Trichy
**( ICICI , Western Union , UAE Exchange, Muthoort** மூலமும் அனுப்பலாம்)

**குறிப்பு :** காணிக்கை அனுப்பும்போது நோக்கம், தொகை, முழுமுகவரி, தொலைபேசி, ஈமெயில் யாவும் எங்களுக்கு தெரியப்படுத்தி உதவுங்கள்.

Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher
from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai,
Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers,
C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.
**Editor : Mr. Stephen Christopher**

REG. NEWS PAPER R.N.I. Number : TNMUL / 2000 / 4011

HUNDRED VILLAGE MINISTRY ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

POSTAL REGISTRATION NUMBER :TRY / 013 / 2009 - 2011

Posting Date 25th at Trichy H.O. Stg.

**ஒரிஸாவை நேசியுங்கள் ! ஒரிஸாவிற்காக ஜெபியுங்கள் !**



ஒரிஸாவிலுள்ள 100 சந்தைவெளிகளில் **கிறிஸ்தவ இலக்கிய புத்தக கடை** வைத்து வசனங்களை கொடுக்கவும், வெளியில் நின்று **கைப்பிரதிகள்** கொடுக்கவும் திட்டமிட்டுள்ளோம்.

**ஒரு குடையின் விலை – ரூ. 900**

**தேவை 15 குடைகள்**

அத்துடன் **ஒரு இலட்சம் சுவிசேஷ கைப்பிரதிகள்** திட்டத்திற்காக ஜெபியுங்கள்.

ஒரு கைப்பிரதி ஒருவருக்கு வழங்க தேவை – **ரூ 1**

1 லட்சம் பேருக்கு வழங்க **உங்கள் பங்கு என்ன ?**




**ஆகஸ்டு 31 நடுஇரவு** ஜெப செய்தி– **அகில இந்திய முழுஇரவு ஜெபஜக்கியம்** தலைவரின் மகன் **சகோ. ஸ்டீபன்**




அக்டோபர் 1 **வாக்குத்தத்தசெய்தி** – TVGM Managing Trustee & **TASOL Founder சகோ. ஸ்டீபன்**

To

**Return Requested:** TVGM Publication Trust,
4/274, Hundred Village,
Somarasampettai, Trichy - 620 102. India.